# திருவேற்காடு நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2019 – 2020

## அமைப்பும் நிர்வாகமும்

**ஆட்சி எல்லை**

சமயக்குறவர் நால்வருள் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றதும் அகத்திய மாமுனிவருக்கு பாலாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் திருமண கோலக்காட்சி அளித்ததும், 63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்ததும் ஆதிசக்தியே உருமாரி வந்து கருமாரியாய் எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் அறமோங்கும் திருவேற்காட்டில், திருவேற்காடு, சுந்தரசோழபுரம், அயனம்பாக்கம், கோலடி, பெருமாளகரம், நூம்பல் ஆகிய 7 கிராம பஞ்சாயத்துகளை ஒன்றாக சேர்த்து அரசு ஆணை எண்: 991/79, நாள் 27.06.1979ன் படி திருவேற்காடு பேரூராட்சி உருவாக்கப்பட்டது. இப்பேரூராட்சி அரசு ஆணை எண்.300, ( நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), நாள் 24.08.2004ன் படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசு ஆணை எண்.154, ( நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), நாள் 09.08.2010ன் படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**மக்கள் தொகை:**

இந்நகராட்சி மக்கள் தொகை 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 62289. இதில் 31437 பேர் ஆண்கள், 30852 பேர் பெண்கள் ஆவர். இது 2011 ஆம் ஆண்டின் மொத்த மக்கள் தொகையை விட 2019 ஆம் ஆண்டு மக்கள் தொகை 70 சதவீதம் கூடுதல் அடைந்துள்ளது.

**நகராட்சி அலுவலர்கள்:**

**ஆணையர்:**

அறிவிக்கையாண்டில் (01.04.2019 முதல் 15.11.2019 முற்பகல் வரை) திருமதி. எஸ். சித்ரா, எம்.காம்., பி.எட்., அவர்கள் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளார். மேலும் (15.11.2019 பிற்பகல் முதல் 31.03.2020 வரை) திரு. எஸ். செந்தில்குமரன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.எம்., அவர்கள் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்துள்ளனர்.

**பொறியாளர்:**

அறிக்கையாண்டில் திரு. கோ. ஆனந்த ஜோதி 01.04.2019 முதல் 07.08.2019 வரை நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார். மேலும் திருமதி. பி. நளினி அவர்கள் 07.08.2019 முதல் 31.03.2020 வரை திருவேற்காடு நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளனர்.

**தேர்தல்:**

2019, 2020 ஆம் ஆண்டு அறிக்கையாண்டில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவில்லை. மேற்படி நகர்மன்றத்தின் பதவிக் காலம் 24.10.2016 உடன் முடிவடைந்ததினை தொடர்ந்து அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 24.10.2016ன்படி நகராட்சி ஆணையரை தனி அலுவலராக நியமித்து உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து (01.04.2019 முதல் 15.11.2019 முற்பகல் வரை) திருமதி. எஸ். சித்ரா, எம்.காம்., பி.எட்., அவர்கள் தனிஅலுவலர் மற்றும் ஆணையராகவும் மேலும் (15.11.2019

பிற்பகல் முதல் 31.03.2020 வரை) திரு. எஸ். செந்தில்குமரன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.எம்., அவர்கள் தனிஅலுவலர் மற்றும் ஆணையராகவும் செயல்பட்டுள்ளார். 2019 – 2020 அறிக்கையாண்டில் 12 சாதாரணக் கூட்டங்களும், 7 அவசரக் கூட்டங்களும் நடைபெற்றன. மொத்தம் 409 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நிர்வாகம் :

திருவேற்காடு நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது இயங்கும் நகராட்சி அலுவலக வளாகத்தினை இடித்து இவ்விடத்திலேயே புதிய கட்டிடம் கட்டிக் கொள்ள ஏதுவாக நகராட்சி அலுவலகம் தற்காலிகமாக இயங்குவதற்கு வாடகை அடிப்படையில் 01.04.2019 முதல் அய்யப்ப சுவாமிகள் மடத்தில் வாடகை கட்டிடத்தில் 31.03.2020 வரை இயங்கி வந்தது.

**2019 – 2020 அறிக்கையாண்டில் நகராட்சியில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் | வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆணையர் | 1 | 11. | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2. | மேலாளர் | 1 | 12. | பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3. | உதவியாளர் | 1 | 13. | சமுதாய அமைப்பாளர் (அயலிடைப்பணியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர்) | 1 |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 3 | 14. | பணி ஆய்வர்கள் | 3 |
| 5. | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 | 15. | மோட்டார் பம்பு இயக்குபவர் | 10 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 | 16. | நகரமைப்பு அலுவலர்/ஆய்வாளர் | 2 |
| 7. | அலுவலக உதவியாளர் | 1 | 17. | துப்புரவு ஆய்வர் | 1 |
| 8. | இரவுக் காவலர் | 1 | 18. | துப்புரவு மேற்பார்வையாளர் | 1 |
| 9. | வருவாய் ஆய்வாளர் | 1 | 19. | துப்புரவு பணியாளர்கள் | 24 |
| 10. | வருவாய் உதவியாளர்கள் | 2 | 20. | பொது சுகாதார பிரிவு ஓட்டுநர் | 3 |
| | | மொத்தம் | | | 60 |

## கணினி மயமாக்கல் மற்றும் மின்னணு நிர்வாகம்:

இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கணினி வரிவசூல் சேவை மையத்திலும் மற்றும் வாடகை அடிப்படையில் தற்காலிகமாக அலுவலகம் இயங்கும் அய்யப்ப சுவாமி வளாகத்தில் கூடுதலாக வரி வசூல் மையம் இயங்கி வருகிறது. வரிவிதிப்புகளுக்கான தொகை பொதுமக்களால் இவ்விரு இடங்களில் செலுத்தப்பட்டு வருகிறது.

## பொது சுகாதாரம்:

இந்நகராட்சியில் நல அலுவலர் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. துப்புரவு ஆய்வாளர் சுகாதார பிரிவின், பிரிவு அலுவலராக செயல்பட்டு வருகிறார். ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், 18 துப்புரவு பணியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 242 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அறியும் வண்ணம் சுகாதாரம் சம்பந்தமான தகவல் கல்வி, தொடர்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 680 பிறப்புகளும், 741 இறப்புகளும் மற்றும் இறந்து பிறந்தவை – 1 பதிவு செய்யப்பட்டது.

### கொள்ளை நோய் விவரங்கள்

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோய் தொடர்பான விவர அறிக்கை

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காலரா | இல்லை |
| 2. | அம்மை | |
| 3. | பிளேக் | |
| 4. | சீதபேதி | |
| 5. | வயிற்றுக் கடுப்பு | |
| 6. | சுவாசப்பை சம்பந்தமான நோய் | |
| 7. | இன்புளுயன்சா மற்றும் நாய்கடி | |
| 8. | கொரோனா வைரஸ் | 1682 |

### துப்புரவு பணிகள்:

பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்நகராட்சிப் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறை நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. டிப்பர் லாரி 1, அறிக்கையாண்டில் 11 சிறிய இலகு ரக வாகனங்கள் மற்றும் 33 பேட்டரி வாகனங்கள் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள வார்டுகளை தனியார் மூலமும் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. திருவேற்காடு நகராட்சியில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள், 7 பசுமை உரக்குடில்கள் ( Micro compost Centre), 10 பூங்கா உரக்குடில்கள் அமைக்கப்பட்டு அங்கு இயற்கை முறையில் உரம் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கும் வீடுகளுக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் FASTEST MOVER CITY என்ற தலைப்பில், புதுதில்லியில் மத்திய அரசின் AWARD வழங்கப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை திட்டம் இந்நகராட்சியில் இல்லை. திறந்தவெளி கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வந்தது.

### உணவு கலப்பட தடுப்பு சட்டம்:

2018 – 2019 ம் ஆண்டு உணவு தற்போது, உணவு பாதுகாப்பு சட்டம் அமலில் உள்ளதால் மேற்படி பணிகள் உணவு பாதுகாப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வருவாய் பிரிவு (வருவாய் இனம்) :**

திருவேற்காடு நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கியது. வருவாய் பிரிவில் ஒரு வருவாய் ஆய்வாளரும் இரண்டு வருவாய் உதவியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது தற்போது ஒரு வருவாய் உதவியாளர் மட்டுமே பணியாற்றி வருகிறார். 2019 – 2020 ல் சொத்து வரி சீராய்வு செய்யப்பட்டு வரியினங்கள் நடைமுறையில் இருந்ததை தற்போது 2018ல் அரசு ஆணையின் படி அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.07.2018ல் 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு (சீராய்வு 2018) மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண் 28555/2018/ஆர்1 நாள்.20.08.2018 ஆம் தேதிய சுற்றறிக்கை வழிக்காட்டுதலின்படி சொத்துவரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தப்பட்டு குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாட்டிற்கு விதிகளின் படி கீழ்க் கண்டுள்ளவாறு சொத்து வரி உயர்வு செய்யப்பட்டது. மேற்கண்ட அரசு ஆணையின் படி சொத்து வரி சீராய்வு செய்யப்பட்ட பின்பு, அரசு ஆணை எண்.150 நாள்.19.11.2019–ன்படி உயர்வு செய்யப்பட்ட சொத்து வரியினங்களை தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் முந்தைய நிலையிலேயே தொடர உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் கீழ் கண்டுள்ளவாறு சொத்து வரி கேட்பு விவரங்கள்.

2019–2020 நடப்பு ஆண்டில் வரியினங்களில் கீழ் கண்டுள்ளவாறு கேட்புகள் அரசு உத்தரவுகளின் படி உயர்வு செய்யப்பட்டு, குறைக்கப்பட்டது.

**சொத்து வரி**

சொத்து வரி விதிப்புகள் 2018–2019–ல் 22350 என இருந்தது. தற்போது நடப்பு ஆண்டில் 2019–2020–ல் 22739 என உயர்வு செய்யப்பட்டு சுமார்390 வரிவிதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

| | கேட்பு தொகை | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| அரசு ஆணையின் படி 2018–2019–ல் சொத்து வரி சீராய்விற்கு பின்பு உயர்த்தப்பட்ட பிறகு கேட்பு | 1598.19 | 889.04 | 709.16 |
| அரசு ஆணையின் படி –ல் சொத்து வரி சீராய்விற்கு பின்பு குறைக்கப்பட்ட கேட்பு தொகை 2019–2020 | 1066.05 | 654.57 | 411.48 |
| குறைக்கப்பட்ட தொகை (நிறுத்தியது) | 532.14 | – | – |

**காலிமனை வரி**

காலிமனை வரி விதிப்புகள் 2018–2019–ல் 2658 என இருந்தது. தற்போது நடப்பு ஆண்டில் 2019–2020–ல் 3252 என உயர்வு செய்யப்பட்டு சுமார்595 வரிவிதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வரி**

தொழில் வரி விதிப்புகள் 2018–2019–ல் மொத்தம் கேட்பு 205.66 ஆக இருந்தது. தற்போது நடப்பு ஆண்டில் 2019–2020–ல் 206.45 என கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்**

இந்நகராட்சிக்கு வரியில்லா இனங்களில் இரண்டு ஆண்டு குத்தகை இனங்கள் மட்டுமே உள்ளது. நகராட்சிக்கு சொந்தமான வணிக உபயோக கடைகள் ஏதும் இல்லை. ஆண்டு குத்தகை இனங்களான 1. வாகன நுழைவு கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம் 2. குளியலறை கூடிய கட்டண கழிப்பிடம்

என இரண்டு குத்தகை இனங்கள் மட்டுமே உள்ளது. மேற்கண்ட இரண்டு குத்தகை இனங்கள் மூலம் நடப்பாண்டில் (2019-2020) 13.91 இலட்சம் இந்நகராட்சிக்கு வரவினமாக வரப்பெற்றுள்ளது.

<u>நகரமைப்பு பிரிவு :</u>

நகரமைப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியிடம் மட்டும் உள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.36 நாள் 26.06.2016ன் படி 01.08.2016 முதல் கட்டிட உரிமையாணை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவண செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் 450 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையாண்டில் வரன்முறைபடுத்து திட்டத்தின் கீழ் 655 கட்டிட மனை விண்ணப்பம் பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

<u>தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டம்(NULM)</u>

இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட சமுதாய அமைப்பாளர் பணியிடம் ஒன்று, மேற்படியாளரை அயற்பணியாக NULM திட்டப் பணிகளை கவனிக்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் சுவர்ண ஜெயந்தி திட்டம் முடிவடைந்து புதிய திட்டமாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் (Tamil Nadu Urban Livebillity) அறிக்கையாண்டில் செயலாக்கத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுவதற்கு வறுமைக் கோட்டுப் பட்டியல் கூராய்வு செய்து சரிபார்க்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை மேன்மைப்படுத்தும் பொருட்டு USHA Slum Servey குடிசைப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பற்றிய கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பில் பெண்களை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்கள் கண்டறியப்பட்டது. விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், திருமணம் ஆகாத பெண்கள், விவாகரத்தானவர்கள், நோய் மற்றும் உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்ட ஆண்களின் வருமானம் ஈட்ட முடியாத குடும்பத்தில் உள்ள பெண்கள் மேற்படி பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு திட்டம் மூலம் பயன் அடையும் பொருட்டு இக்கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது.

புதியதாக துவங்கப்பட்டுள்ள தமிழ்நாடு வாழ்வாதார திட்டம் (TNLUM) கீழ்க்கண்ட வகைப்பாடுகள் மூலம் செயல்பட்டு வருகிறது.

1. சமுதாய மேம்பாட்டுத் திட்டம் (Social Mobilization & Institution Development)
2. திறன் வளர் பயிற்சி (Capacity Building)
3. திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு (Employment through Skilled and Training)
4. தனிநபர் தொழில் வளர்ச்சி திட்டம் (Self Employment Programme)
5. வீடற்ற மக்களுக்கு உறைவிடம் (Shelter for Urban Homeless) (இந்நகராட்சியில் இத்திட்டம் இல்லை)
6. சாலையோர வியாபாரிகளுக்கு வளர்ச்சித் திட்டம் (Support to Urban Street Vendors)

இவ்வகைப்பாடுகள் மூலம் இத்திட்டம் நகர்ப்புறத்தில் உள்ள மக்களின் வாழ்கைத்தரம் மேம்படுத்திட சாலையோர வியாபாரிகள் பற்றிய கணக்கெடுப்பு முடிக்கப்பட்டது. பயனாளிகளுக்கு

நகராட்சியின் நகரமைப்பு பிரிவின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் மேற்படி திட்டங்கள் யாவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சமுதாய அமைப்பாளரின் ஒருங்கிணைப்பில் நகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் இந்நகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பொறியியல் பணிகள்:**

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் 2018 – 2019ம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை(ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | சென்னை பெருநகர வளர்ச்சி குழும திறந்தவெளி ஒதுக்கீடு கட்டண நிதி 2019 – 2020<br>அ) பூங்கா மேம்பாட்டு பணிகள் | OSR நிதி ரூ. 400.00<br>பொது நிதி ரூ. 0.00<br>மொத்தம் ரூ. 400.00 |
| 2 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2019 2010<br>Phase- I and Phase - II<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள அடிப்படை வசதி பணிகள் செய்தல். | அரசு நிதி ரூ. 1390.00<br>பொது நிதி ரூ. 410.00<br>மொத்தம் ரூ.1800.00 |
| 3 | 14வது நிதி குழு ஆணையத்தின் பரிந்துரை மானியம் 2019 – 2020<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை புதுப்பித்தல். | அரசு நிதி ரூ. 236.58<br>பொது நிதி ரூ. 0.00<br>மொத்தம் ரூ. 236.58 |

**பொது நிதி பணிகள் :**

| வ.எண். | பணிகளின் விவரம் | 2019 – 2020 | |
|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டவை | மதிப்பீடு ( ரூ. இலட்சத்தில்) |
| 1. | தார் சாலைகள் | 14 | 125.26 |
| 2. | சிமெண்ட் சாலைகள் | 0 | 0 |
| 3. | குடிநீர் பணிகள் | 46 | 307.10 |
| 4. | தெரு விளக்கு பணிகள் | 18 | 135.20 |
| 5. | மழைநீர் வடிகால்வாய் பணிகள் | 25 | 380.80 |
| 6. | அலுவலக கட்டிடம் கட்டும் பணி | 0 | 0 |
| 7. | இதர பணிகள் | 31 | 187.55 |
| | மொத்தம் | 134 | 1135.91 |

திருவேற்காடு நகராட்சிப் பகுதிகளில், மத்திய / மாநில அரசுகள் நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப்படும் திட்டம் மற்றும் பணிகள் யாவும் மேற்படி அறிக்கையாண்டில் சிறப்பான முறையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

S. Senthil

தனி அலுவலர் மற்றும் ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.